# வவுனியாவில் புலிகள் தாக்குதல்; 5ராணுவம் பலி

(யாழ்ப்பாணம்) வவுனியாவில் இராணுவ அணிசளுக்கு பாதுகாப்பு அளிக்கும் கடமையிலீடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் மீட்கப் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 88 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆவணி 25 | இதழ்: 211
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 10-9-1991

## 6 சிப்பாய்களைக் காணவில்லை!

(கொழும்பு) வவுனியாவில்கடமையாற்றிவரும் இராணுவத்தினரில் ஆறு சிப்பாய்கள் காணமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களில் ஆறு (4-ம் பக்கம் பார்க்க)

## பாசிக்குடா பகுதியில் 35 சடலங்கள் மீட்பு

(கொழும்பு) மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடாவை அண்டிய பகுதியில்; பாரிய புதைகுழி ஒன்றினுள் 35 சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக இரா (4ம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் தங்கியுள்ள

# தமிழ் அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்பமாட்டோம்!

## அமைச்சர் சோமசுந்தரம் தகவல்

(சென்னை)

"தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்" என்று தமிழக வருவாய்த்துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் தெரிவித்தார்.

மதுரை மற்றும் சுற்றுப்புறங்களில் தங்கியுள்ள அகதிகளை பார்வையிட்டபின் மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அங்கு செய்தியாளரிடையே பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். [4-ம் பக்கம் பார்க்க]

## ஆறு வேங்கைகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்) மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் நேற்றுமுன்தினம் ஆறு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

பரிமளா (கந்தசாமி சந்திரபவானி, திருநெல்வேலி), மதுரா (பரமவடிவம்மாள், (2-ம் பக்கம் பார்க்க)

## மணலாறு - நித்திகைக்குளம்: தொடர்ந்து கடும் சமர்

(யாழ்ப்பாணம்) மணலாறு- நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் புலிகளுக்கும் அரசபடையினருக்குமிடையில் கடும் சமர் இடம்பெற்று வருகிறது. நேற்றும் காட்டுப்பகுதியில் முன்முனைத் தாக்குதலுக்கு மத்தியில் படையினர் முன்னேற முயன்றபோது புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். (4-ம் பக்கம் பார்க்க)

### குவைத்திலிருந்து

## திரும்பிய யாழ்.வாசிகளுக்கு விசேட நிவாரணம்

(யாழ்ப்பாணம்) குவைத்திலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியவர்களுக்கு விசேட நிவாரணம் வழங்கப்படவிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. க.மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

வளைகுடா யுத்தம் காரணமாக குவைத்திலிருந்து வேலையிழந்து யாழ், மாவட்டத்துக்குத் திரும்பிய ஆறாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக விசேட விண்ணப்பப்படிவம் ஒன்று விரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும் யாழ். அரசஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### வடக்கிற்கு உணவு எடுத்துவர

## இராணுவம் கெடுபிடி; அரச அதிபர் முறையீடு

(யாழ்ப்பாணம்) இராணுவத்தினரின் கெடுபிடிகளினாலேயே வடமாகாணத்துக்குள் லொறிகள் மூலம் உணவுப்பொருள்களைகொண்டு வருவதில் பெரும் தாமதம் ஏற்படுவதாக யாழ். அரசாங்க அதிபர் மேலிடத்துக்கு முறையீடு செய்துள்ளார். (4ம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் காணமல்போன

## 2,600 தமிழர் விபரம் உள்ளூர் பிரமுகர்களிடமுண்டு

(மட்டக்களப்பு) கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டும், காணமல் போனவர்களில் சுமார் 2,600 பேரின் பெயர் விபரங்கள் உள்ளூர் பிரமுகர்களிடம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்திற்கு மேல் கிழக்கில் மாத்திரம் 3,500க்கும்மேற்பட்ட தமிழர் (2ம் பக்கம் பார்க்க)

## தமிழர் முழுமையான வரலாறு வெளிக்கொணரப்படவேண்டும்

### மாத்தையா கருத்து

[யாழ்ப்பாணம்] "சிங்களப் பேரினவாதிகளால் திரிபுபடுத்தப்பட்ட எமது வரலாற்றை திருத்தி அமைத்து முழுமையான அளவில் அதை வெளிக்கொணர வேண்டும்'' இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித்தலைவர் கோ. மகேந்திரராசா [மாத்தயா] யாழ்: இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு ஆறுக் (4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்) யாழ். ஆஸ்பத்திரிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் மருந்து வகைகள் இன்று அல்லது நாளை லொறிகள் [2ம் பக்கம் பார்க்க]

### 1990 ஜூன் முதல்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 325 கோயில்கள் சேதம்

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் ஜூன் மாதம்முதல்ஏற்பட்டயுத்தத்தினால் 325 வணக்கத்தலங்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 2 கோடியே 27 லட்சத்து 15 ஆயிரம் ரூபா நட்டமேற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மாகாண சபைக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [158]

## முகாம்களில்இல்லாதவருக்கு உணவு நிவாரணம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்) அகதிமுகாம்களில் இல்லாமல் வெளியிடங்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு இம்மாதத்துடன் இலவச உணவு விநியோகம் நிறுத்தப்படலாமெனத் தெரியவருகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகள் முகாம்களில் நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்களுக்கு மாத்திரமே தொடர்ந்து நிவாரணம் வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளதாக யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அகதிமுகாம்களைத் தவிர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கும் தொடர்ந்து நிவாரணம் வழங்கப்படுமெனக் கடந்த மாதம் அரசு அறிவித் [4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வானொலி நாடகம்

இன்று விற்பனையாகின்ற இரண்டே இரண்டு வானொலி நாடக நூல்கள் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- மாணவர்களும் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவை. (சி 5142)

### வரலாறு ஆண்டு 11 O/L

1990லிருந்து நடைமுறைப் படுத்தப்படும் புதிய பாடத் திட்டத்திற்கமைய எழுதப் பட்ட வரலாறு குறிப்புகள் ஆண்டு 11, சமூகக் கல்வி குறிப்புகள் ஆண்டு 10, ஆண்டு 11 வெளியாகியுள்ளன. பாடத் திட்டம், பாடவேளைகளுக்கமைய வினா விடைகளாக அமைந்துள்ளன. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். குறிப்பிட்டளவு பிரதிகளே விற்பனைக்குள்ளன. ஆக்கம்: நா. மயில்வாகனம், B A (Hons) வரலாறு: சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் (சி-5309)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



## பாராட்டு விழா

(வடமராட்சி)

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு சி. குழந்தைவேலுவின் முப்பது வருட சேவையினைப் பாராட்டி இம்மாதம் 14 ஆம் திகதி உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு சி கணபதிப்பிள்ளை தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

## மாவீரர் நடுகல்கோட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட மேஜர் றஞ்சன் [சித்தப்பா] ஞாபகார்த்த சிறுவர் பூங்காவும் வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டமும் கப்டன் சிதம்பரத்தின் தாயாரினால் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்புவிழாவை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தயா) தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சிறுவர் பூங்காவினதும் மாவீரர் நடுகல் கோட்டத்தினதும் பெயரைத் திரைநீக்கம் செய்து வைத்தார். [52]

# 'சீல்'வைக்கப்படாத இறைச்சி பறிமுதலாகும்

(பண்டத்தரிப்பு)

''எமது பிரதேசத்திலுள்ள இறைச்சிக் கடைகளில் மனித பாவனைக்கு உகந்த முறையில் இறைச்சி வழங்கப்படவேண்டும். பொது சுகாதாரப் பரிசோதகரினால் ''சீல்'' வைக்கப்படாத இறைச்சியை விற்பனைக்கு வைத்திருப்போர்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் பிரஸ்தாப இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டுப் புதைக்கப்படும்.''

இவ்வாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் தமது பிரிவிலுள்ள இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து அதில் உரையாற்றுகையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சங்கானையிலுள்ள மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் இறைச்சிக் கடைகளுக்கான புதிய நடைமுறைத் திட்டங்கள் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. இப்பிரிவைச் சேர்ந்த சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவனும் கலந்துகொண்டு உரையாற்றினர். [72]

## தபால் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பகுதி மக்களுக்கான தபால் விநியோகம் யாழ் தபால் நிலையத்தில் இணைந்துள்ள ஊர்காவற்றுறை தபால் நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுவருகிறது. செம்பியன்பற்று, சுண்டிக்குளம், தாளையடி ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்கு செம்பியன்பற்று உபதபால் நிலையத்தில் வைத்து தபால் விநியோகம் நடைபெற்றுவருகின்றது. [53]

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கொல்லப்பட்டும் 4000 பேருக்கு மேல் காணாமலும் போயுள்ளனர்.

மேற்படி விபரங்களை சர்வதேச செய்தி நிறுவனங்களும் மன்னிப்புச் சபையும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஆறு வேங்கைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீசாலை), கல்பனா (கனகரட்னம் அருள்நிதி, அல்வாய்). சலுஜா (கணபதிப்பிள்ளை ரவீஸ்வரி கரவெட்டி). அக்கினோ (இராசரட்னம் கலைவாணி நுணாவில்), குணசீலி (தயாபர சா சிவராஜி, திருநெல்வேலி) ஆகிய வேங்கைகளே வீரமரணமடைந்தவர்களாவார்கள்.

இவர்களுக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## யாழ். ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் யாழ். நகர் வந்து சேர்ந்துவிடுமென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக விசர் நாய்க்கடி மருந்து உட்பட பல அத்தியாவசிய மருந்துவகைகள் லொறியில் கொழும்பிலிருந்து வருவதாகவும் வேறு சில மருந்து வகைகள் கப்பலில் வருவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு தேவைப்படும் புதிய ''எக்ஸ்ரே'' கருவியும் விரைவில் இங்கு வந்து சேரும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் இக்கருவி லண்டனிலிருந்து கொழும்பு வந்ததும், லொறி மூலம் யாழ் நகருக்கு அனுப்பி வைக்கப்படுமென்று, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (வி)

# லலித் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஐ. தே. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட 8 உறுப்பினர்களும் விரைவில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இலங்கை அரசியலமைப்புச் சட்டப்படி கட்சியுறுப்பினர் நீக்கப்பட்டாலும் ஒரு மாதம் வரை நாடாளுமன்ற பதவி பறிபோய்விடாது எனக் கூறப்படுகிறது.

இதனைப் பயன்படுத்தி திரு. லலித் அத்துலத்முதலி உட்பட 8 உறுப்பினர்களும் வழக்குத் தாக்குதல் செய்யவுள்ளனர். (க)

## இராசி பலன்

10 • 09 • 1991

செவ்வாய்க்கிழமை

தமிழுக்கு ஆவணி 25

திதியை பி. ப. 2-36வரை

அத்தம் பி. இ. 1-57 வரை

இராகுகாலம்: மாலை 3-03 முதல் 4-33 வரை.

சுபநேரம்: காலை 10-35 முதல் 12-03 வரை.

அதிர்ஷ்ட எண்கள்: 1, 4, 7

மேஷம்: தெளிவான சிந்தனை, தொழில்சிறப்பு, குடும்ப சுகம்.

இடபம்: முன்னேற்றத் தடை, தொழில் கஷ்டம், பிடிவாதம்.

மிதுனம்: மனத்தளர்ச்சி, சந்தேக மனப்பான்மை, பண முடை.

கடகம்: பொறுமை, தெய்வ சிந்தனை, தொழில் பேறு

சிம்மம்: கருத்து முரண்பாடு, நேர்மை குறைவு, கடன் சுமை.

கன்னி: வீண் ஜம்பம், தைரியம், தொழில் சிறப்பு.

துலாம்: நாணயக்குறைவு, அசட்டு தைரியம், தேவையற்ற வாதம்.

விருச்சிகம்: தனிமை நிலை, குடும்ப அமைதி, பணவரவு.

தனுசு: அறிவாற்றல், துணிச்சல், மனமகிழ்ச்சி.

மகரம்: அதிர்ஷ்டம், இனசனப் பகை, மனக்குறை.

கும்பம்: வீண் தொல்லை, தீய எண்ணம், வைத்திய செலவு

மீனம்: சபலமடைதல், பொதுப்பணி, நற்செய்தி.

பொதுப்பலன்: சாதாரண தினம்.

ஜோஸ்யர்

# அரச ஊழியர்க்கு படையினர் சலுகை

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து வரும் அரச ஊழியர்கள் வாரம் ஒன்றிற்கு 10 லீற்றர் மண்ணெண்ணையும் 5 சவர்க்காரக் கட்டிகளையும் கொண்டு வர படையினர் அனுமதிப்பதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பொதுமக்கள் நகருக்குள் மண்எண்ணெய் வாங்கச் செல்வதற்கு வெள்ளிக்கிழமை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனராம்.

ஒருவர் 5 லீற்றர் மண்எண்ணெய் மட்டுமே கொண்டுவர அனுமதிக்கப்படுவதோடு 2 சவர்க்காரம் மட்டுமே கொண்டு வரலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



## கந்தரோடை சனசமூக நிலையம் ஸ்ரீ சுப்பிரமணிய வாசகசாலை

### ஆண்டுவிழா

மேற்படி நிலையத்தின் 41-ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பின்வரும் நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன.

[1] உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி [11 பேர் கொண்டது]

[2] மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி [7 பேர் கொண்டது 6 ஓவர்]

[3] கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி [6 பேர் கொண்டது ஓவர் கேம்]

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் அணிகள் 20-09-91 ற்கு முன்னர் கடிதமூலமாகவோ, நேரடியாகவோ நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். [சி 5307]

## முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில்: 30-06-1980

●

ஆண்டவன் அடியில்: 10-09-1990

### செல்வன் முருகையா ஜெயதரன் (ஜெகன்)

(5ஆம் ஆண்டு மாணவன் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்)

விதிசெய்த சதியாலே கதியற்றுக் கலங்குகின்றோம்
மதிமிக்க உன்திறமை மறக்கத்தான் போய்விடுமோ
பிஞ்சு வயதினிலே பிரிந்து சென்ற பெருமகனே
நெஞ்சிருக்கும் வரை நினைவிருத்தி வணங்குவமே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

சூராவத்தை, சுன்னாகம்,
காட்டு வயிரவர் கோவிலடி,
உரும்பிராய்.

ஐ முருகையா
(தொலைத்தொடர்புத் திணைக்களம்,)
யாழ்ப்பாணம்.

[சி-5283]

## நினைவலைகள்



### செ. மணிவண்ணன்

[01-03-1967 --- 22-08-1990]

சென்ற ஆண்டு சிங்கள
கொலைஞரின் ஹெலி
வேட்டுக்கு இரையான
எம் இளவல்
**மணிவண்ணன்**
திதிக் கிரியை இன்று
10-09-91.

உன் பிரிவால் கவலையுறும்:
அம்மா, தம்பிமார்.

தென் மட்டுவில்,
சாவகச்சேரி.

[சி 5264]

# இலங்கை - இந்தியா மோதும்

## 'கச்சதீவு அரசியல்'

கச்சதீவு இந்தியா இலங்கைக்கு இடையிலுள்ள சிறியதீவு. 1.4 கிலோ மீட்டர் நீளமும் 275 மீற்றர் அகலமும் கொண்ட 4 சதுர கிலோ மீட்டர் பரப்புமுள்ள சின்னஞ் சிறிய தீவு. இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதிக்கு சொந்தமாக இருந்த இத்தீவை 1947ல் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம்வரும் வரை இத்தீவு சேதுபதிக்குச் செல்வத்தை சேர்த்துத்தந்தது. தீவைச் சுற்றி முத்துக்குளிப்பு நடந்தது. தீவில் கிடைத்த செடி வகைகள் வேர்கள் மருத்துவத்துக்கு மருந்தாயின. மீன் வகைகள் உலரவைக்க மீன் பிடித்துறையாகியது. காலம் செல்லச்செல்ல தமிழக மக்களும் இலங்கை மக்களும் சந்தித்து சிலநாள் தங்கிப்போகும் சந்திப்பு இடமாகியது ஆண்டு தோறும் கச்சதீவு அந்தோனியார் திருவிழா தமிழ்நாட்டு உறவினர்களைச் சந்திக்கும் இடமாக மலையக மக்களுக்கு விளங்கியது.

கச்சதீவை கடற்படைக்குப் பயிற்சிதரும்இடமாகஇலங்கை 1955ல் அறிவித்தது. இதை இந்தியா கண்டித்தபோதும் 1956ம் ஆண்டிலும் மீண்டும் அதுபோல இலங்கை அறிவித்தது. இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்ப்புக்குரல் எழுந்தது. அன்றைய பிரதமர் ஜவஹர்லால்நேரு ''கச்சதீவு பற்றிய விபரங்களை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இச்சிறுதீவுபற்றி இரு நாடுகளும் போராட வேண்டிய அவசியமில்லை'' என்றார்.

1968ல் கச்சதீவை இலங்கை எடுத்துக்கொண்டதாக இலங்கைப் பத்திரிகைகள் எழுதியதையடுத்து இந்திய நாடாளுமன்றத்தில் குரல்கள் எழுந்தன. அன்றைய பிரதமர் இந்திராகாந்தி இவ்விடயத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்தார்.

1974ல் இந்தியா கச்சதீவை உடன்படிக்கை ஒன்றின் மூலம் இலங்கையிடம் கையளித்தது.

இந்தியா-இலங்கை அரசுகள் தமது கடல்பகுதி சம்பந்தப்பட்ட இரண்டு ஒப்பந்தங்களை செய்துகொண்டன. முதல் ஒப்பந்தம் கச்சதீவுப்பகுதி அடங்கிய பாக்-ஜலசந்தி பற்றிய ஒப்பந்தம். அதில் கச்சதீவை இந்தியா இலங்கைக்கு விட்டுக்கொடுத்தலும், தமிழக மீனவர்கள் வழக்கம்போல் அங்கு மீன்பிடிக்க உரிமையுண்டு.

இரண்டாம் ஒப்பந்தம் மன்னார் வளைகுடா பற்றியது. இதில் கச்சதீவு சம்பந்தப்படாததால் தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமைபற்றி குறிப்பிடப்படவில்லை. இதனை இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை கச்சதீவுப்பகுதிகளில் செல்ல அனுமதிக்கவில்லை. அப்படிச் செல்பவர்களை மிரட்டி கொடுமைப்படுத்தி மீனவர்களை கைது செய்தும், வலைகள், படகுகளை அழித்தும் வந்தன.

இதையடுத்து இந்த வருடம் நடைபெற்ற தமிழக தேர்தலில், கச்சதீவை இலங்கையிடமிருந்துபெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமென அ. இ. அ. தி. மு. க. தனது தேர்தல் பிரசாரத்தில் குறிப்பிட்டது. தற்போது அந்த முயற்சியில் ஈடுபட்டுமுள்ளது.

தமிழகஅரசின் நடவடிக்கைகளை கண்டித்துள்ள இலங்கை அரசு கச்சதீவில் மேலதிக கடற்படையை நிறுத்தியுள்ளதுடன் இப்பகுதியினுள் அத்துமீறும் இந்திய மீனவர்க்கு எதிராக கடும்நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

இந்தப்பிரச்சனை தற்போது இரு நாடுகளுக்கிடையேயும் பெரும் சிக்கலை ஏற்படுத்தி வருகிறது. [எஸ்]

# "உச்ச பயனை அளிக்கும் செயற்பாடுகள் அவசியம்"

[யாழ்ப்பாணம்]

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்வடிவங்கள் அரச இயந்திரத்துடன் ஒழுங்கமைப்பான முறையில் இணைந்து செயலாற்றும்பொழுது நிவாரண, புனர்வாழ்வு, அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு உச்ச பயனை அளிக்கின்றன. ஆனால் இச்செயற்பாடானது எப்பொழுதும் மக்களின் எதிர்பார்ப்புகளின்படி அமைவதாக தென்படவில்லை என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகச் செயலாளர் திரு சொ. யோகநாதன் ஆய்வுப் பட்டறை ஆய்வு அறிமுகவுரையில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் ஆய்வுக் கருத்தரங்கின் முக்கிய நோக்கமானது எமது கழகத்தின் திட்டமிடல் பிரிவின் செயற்பாட்டினை எம்மைப் போன்ற மக்களுக்காகப் பணிபுரியும் ஏனைய நிறுவனங்களின் அனுபவங்களின் கருத்துப் பரிமாற்றங்கள்னூடாக மேம்படுத்துவதாகும்.

எமது நாட்டின் அசாதரண சூழ்நிலைகளில் சாதாரணமாக மக்கள் வாழப் பழகிக்கொண்டாலும், அச் செயற்பாடானது பல சிக்கல்கள், இன்னல்கள் மத்தியில்தான் நடைபெறுகின்றது. அது ஓர் போராட்டமாகவே இருக்கின்றது. எம் மக்கள் மிகத் துணிவுடன் இதனை எதிர்கொண்டு வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

இச்செயற்பாடுகளை வலுவூட்டக்கூடியதாக புதிய பல வழிமுறைகளை மக்கள் முன்வைக்க வேண்டியது எமது கடமைகளில் ஒன்றாகும் என்றார். (153

# ஓராண்டு நினைவஞ்சலி







| திரு. | செல்வி | திருமதி |
| --- | --- | --- |
| சி. ப. ஆறுமுகம் [இளைப்பாறிய அதிபர்] | ம. திருமகள் [வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி] | ஆ. வள்ளியம்மை |
| தோற்றம்: 30-10-1916 | 03-10-1971 | 22-01-1925 |

அந்நிய அழிப்பு: 22-08-1990

அன்பெனும் தீபமேற்றி
அறிவெனும ஞானமூட்டி
பண்பெனும் சிகரமேறி - எனைப்
பார்த்திடும் இனிய தங்காய்.

சீருடை அணிந்து நீயும்
செல்லுவாய் பள்ளி அன்று
சிறந்ததோர் அறிவைப் பெற்றாய்
செம்மைசேர் புகழைப் பெற்றாய்.

மாறிலா அன்பு தந்தாய்
மறைந்திடா ஜோதி ஆனாய்
ஆருயிர்த் தங்கை திருவே - நீ
அறுதுயில் கொண்ட தேனே.

இளமையில் உந்தன் உயிரை
யமனவன் பறித்த தேனோ!
காடையர் வடிவில் வந்து - உன்
கதைதனை முடித்த தேனோ.

ஆண்டொன்றான போதும்
அழிந்திடா உந்தன் நினைவால்
திதியினை நாடி நானும் துதிக்கின்றேன்
உன் ஆத்மா சாந்திக்காக
ஓம்.. ... சாந்தி...... சாந்தி......

அன்புத் தங்கை திருமகளினதும் திரு: திருமதி ஆறுமுகம் அவர்களினதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்பிகையைப் பிரார்த்திப்போமாக!

இங்ஙனம்:

ச. ஆ. சோமசுந்தரம் குடும்பம்.
பொட்டன்

பாலாவோடை,
காரைநகர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

சி. ப. ஆறுமுகம்
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 30-10-1916 மறைவு: 22-8-1990 திதி: 10-09-1991

பாசமுள்ள அப்பாவே! எம்மைப் பள்ளிக்கனுப்பி கல்வி புகட்டி பாரினில் நடமாட வைத்தீர்கள் பாழ்பட்ட ராணுவத்தின் கொடுமையால் தங்கள் உடல் தீயில் வெந்தாலும் தங்கள் விருப்புகள் அழியாது தங்கள் ஆத்மா பரமனடைய பிரார்த்திக்கின்றேன்.

திருமதி ஆ. வள்ளியம்மை

தோற்றம்: 22-01-1925 மறைவு: 22-8-1990

குடும்பத்தின் குலவிளக்கே எம் தாயே தெய்வமே ஐயறிவை மட்டும் கொண்ட சிங்கத்தின் சந்ததியினரின் தீயில் வெந்தாலும் பரமன் மகன் பாதம் பற்றித்தீர்க்க சுமங்கலியாகிய வரலாறு படைத்தீர்கள் அம்மா!

செல்வி மகேஸ்வரன் திருமகள்

தோற்றம்; 3-10-1971 வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி) மறைவு: 22-8-1990

திருவே என் செல்வமே எம் குலக்கொழுந்தே மாண்புமிகு மகளிர் கல்லூரியின் பாங்காகக் கணக்கியல் பயின்றீர் அம்மா. எங்கள் குடும்பத்தின் மலர் காயாகி கனியாகுமுன் காலனவன் சிங்களக் காடையரின் உருவில் வந்து தீயில் கருக்கி விட்டான். பரந்தாமன் பாதமடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவால் வாடும்!
அன்பு மகள், பேத்தி, அம்மா, தங்கை, தம்பியார்.

அம்பிளா,
காரைநகர்.

[கி-5208]

## ஆய்வு நிறுவனத்தின் இரு வழிக் கைப்பம்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தடையானது விவசாயத்தை கட்டுப்படுத்தும் முக்கிய ஓர் காரணியாக உள்ளது. சிறிய நிலப்பரப்பை நம்பி விவசாயத்தை மேற்கொள்ளும் மக்கள் இவ் இருவழிக் கைப்பம்பிமூலம் பெரும் பயனை அடையமுடியும் இதைக் கருத்தில்கொண்டு இவ்விரு கைப்பம்பி தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

இவ்விரு வழிக் கைப்பம்பி 60% எஸ்லோன் குழாய்மூலம் 20% லோகம் 20% மரத்தாலும் ஆக்கப்பட்டதாகும். இப்பம்பி சுமார் 100 யார் தூரத்திற்கு இடையாக குழாய் மூலம் நீரைத்தள்ள வல்லது. 20 அடி உயரத்தில் நீரை ஏற்ற வல்லது. 25 அடி தொடக்கம் 28 அடி வரைக்கும் ஆழம் உள்ள கிணற்றில் இருந்து நீரை உறிஞ்சவல்லது. ஆழம் குறைந்த 12 அடி- 13 அடிக்கு உட்பட்ட கிணறுகளில் புட்வால் இல்லாமலே நீரை உறிஞ்சவல்லது. ஒரு மணித்தியாலத்திற்கு சுமார் 1100-1200 கலன் நீரை இறைக்க வல்லது.

இப் பம்பியைக் கொண்டு குறைந்த பட்சம் 1-1 1/2பரப்புக் காணிக்கு நீர் பாய்ச்சமுடியும். திட்டமிட்ட அடிப்படையில் ஓய்வு நேரங்களில் தொட்டிகளில் நீரை இறைத்து வசதியான நேரங்களில் விவசாய நிலப்பரப்புக்கு நீரைப்பாய்ச்ச முடியும். 1000 கண்டுதரை உள்ள விவசாயி இதன் உபயோகத்தின்மூலம் சுலபமாக நீரைஇறைக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையின் சிகிச்சைக்காக சென்ற யாழ்ப்பாணப் பகுதி நோயாளர்கள் 18 பேர் சிகிச்சைபெற்றுக்கொண்டு கடந்த 6ம் திகதி வந்த குமண கப்பலில் வந்து சேர்ந்தனர். (65)

# "தமிழரின் தலைநகர் திருமலையில் தமிழீழ கொடி பறக்க வேண்டும்"

## - யோகி உரை

(யாழ்ப்பாணம்)

''தமிழர்களின் தலைநகரா கிய திருகோணமலையில் எங் கள் தமிழீழக் கொடி பறக்க வேண்டும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர்நாயகம திரு யோகரத்தினம் யோகி தெரி வித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஆண்டு 6-க்கான வரலாறு பாடநூல் வெளி யீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசு கையில் கூறியதாவது:-

எமது வரலாற்றை மதத் தோடு சரிப்படுத்திப் பார்க் காமல் தமிழரின் பண்பாட் டோடு சேர்த்துப்பார்க்க வேண்டும்.

எமது மண்ணை நேசிக்கக் கூடியவகையில் வரலாற்று நூல்கள் எழுதப்படவேண் டும். வரலாறு கற்பிக்கும் ஆசி ரியர்கள் வரலாற்றை மாண வர்களுக்குத் தெளிவாகக் கற் பிக்கவேண்டும்.

எமது மண்ணின் வரலாற் றினை முழுமையாகத் திரட்டி ஆவணங்களாக வெளியிட வேண்டும் என்றார். (152)

## தமது மகனை புலிகளிடம் ஒப்படைத்த பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் நடைபெற்ற போராட்டசூழ்நிலை கலந்துரை யாடலை அடுத்து பெற்றோர் தமது மகனை விடுதலைப் புலி களிடம் ஒப்படைத்தனர்.

வென்சிலாஸ் றேபேட் என்ற தமது மகனை பெற்றோர் களாகிய சி. வென்சிலாஸ், சின்னம்மா ஆகியோர் அரி யாலை விடுதலை புலிகள்மக்கள் முன்னணி உறுப்பினரிடம் ஒப்படைத்தனர். (153)

## எழுதுவினைஞர், கிராமசேவகர் பதவி விண்ணப்ப 'கட்டணங்கள் செலுத்த ஏற்பாடு

(மானிப்பாய்)

எழுதுவினைஞர், கிராம சேவகர் பதவிகளுக்கான விண் ணப்பக் கட்டணங்கள் நேற்று 9-ந் திகதி முதல் யாழ். செய லகத்தில் ஏற்றுக்கொள்ளப்படு கின்றன.

யாழ். செயலக சிறுப்பர் அலுவலகத்தில் மேலதிக கரும பீடமொன்று அமைக்கப்பட்டு டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் கட் டணங்களைச் செலுத்தியபின் விண்ணப்பங்களையும் அக்கரும பீடத்தில் நேரடியாகக் கைய ளிக்க வேண்டுமென தெரிவிக் கப்படுகிறது. (71)

## 'சாளரம்'

(யாழ்ப்பாணம்)

'போரும் பாடசாலையும்', 'தற்போதைய நெருக்கடிக ளும்' மாற்று சிகிச்சை முறை களும்' உட்பட பலசுவையான அம்சங்களுடன் விபுலானந்த அடிகளாரின் இரு தோற்றங்க ளைக் கொண்ட முகப்பு அட் டையுடன் 'சாளரம்' இன்று வெளிவருகிறது. (வி)

## துணிகள் பறிமுதல்

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து லொறி மூலம் யாழ்ப்பாணத்திற்கு பிர பல புடவை வர்த்தகர் ஒருவ ரால்கொண்டுவரப்பட்ட துணி வகைகளில் பச்சை நிறத்துணி யாவும் வவுனியா இராணுவ தடைமுகாமில் வைத்து பறி முதல் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (72)

## பீரங்கி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மேற்கு திருவடி நிலைப் பகுதியில் ரோந்து நட வடிக்கையில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா கடற்படையின் விசைப்படகிலிருந்து நேற்றுக் காலை ஏழு மணியளவில் சர மாரியான பீரங்கித் தாக்கு தல் கரைப்பகுதியை நோக்கி நடாத்தப்பட்டது. (72)

## வடபகுதிக்கு உரவகைகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்குத் தேவையான சில உரவகைகளை அனுப்பி வைப்பதற்கு அரசு அனுமதி யளித்துள்ளதாக யாழ். செய லக அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்

மேற்படி உரவகைகளை கடன் அடிப்படையில் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைப்பதற்கு அரசு அனுமதி யளித்துள்ளதாம். (வி)

## காவலரண் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வீமன்காமம் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை தாக்குதல் நடத்தினர் கள்

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விப ரங்கள் பற்றி தெரிவிக்கப்பட வில்லை.

## மண்ணெண்ணை வருகிறது

(கொழும்பு)

வடபகுதிக்கு இவ்வாரம் மண்ணெண்ணை அனுப்பி வைக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு கொழும்பில் தெரி வித்துள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கொழும் பில் பாதுகாப்பு அமைச்சுடன் நடாத்திய பேச்சு வார்த்தை யின் நிமித்தமே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## கிழக்கு தளபதி

(கொழும்பு)

பிரதி இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம, கிழக்கு மாகாணத்தில் புதிய இராணுவத் தளபதியாக நிய மிக்கப்பட்டுள்ளார். (வி)

## நீதியரசர் நியமனம்

(கொழும்பு)

மாவட்ட நீதிபதி திரு. கே. விஜேரத்ன இம் மாதம் 30-ம் திகதியிலிருந்து மேல்நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி பிரேம தாசவினால் நியமிக்கப்பட்டுள் ளார்.

## மண்ணெண்ணை வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் கொண்டு வரப்பட்ட மண்ணெண்ணை யாழ். போதனாவைத்தியசாலை யில் கடமையாற்றும் ஊழியர் களுக்கு வழங்கப்பட்டு வரு கிறது.

ஒரு ஊழியருக்கு 15 ரூபா வீதம் 3லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்படவுள்ளது. (56)

## 10 லட்சம் உறுப்பினரை ஐ.தே.க.வில் சேர்க்க முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிதா 10 லட்சம் அங்கத்த வர்களை சேர்த்துக்கொள்ளும் படி ஜனாதிபதி ஆர். பிரேம தாசா, தமது கட்சிகிளைகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற இருப்பதினால், அதற்கு முன்பு மேற்படி புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளும்படி ஜனாதிபதி வேண்டுகோள்விடுத்துள்ளார். (வி)

## நீர்வை அரசகேசரி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரி பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 13-ம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி றது

22-ம் திகதி காலை தேர்த் திருவிழாவும் 23-ம் திகதி தீர்த்தோற்சவமும் 24-ம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெற்று உற்சவம் நிறைவு பெறும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் இவ் ஆலயமும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது. (க)

## முகாம்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதிலும் நிதி நெருக் கடி காரணமாக இதனை நிறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வி)

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான வரலாற்று நூல் வெளி யீட்டு விழாவின் போது குறிப் பிட்டார்

அவர் மேலும் கூறியதாவது: 'தமிழர்கள் தங்கள் இலட்சி யத்தை நோக்கிய திசையில் ஒரு அடி முன்னேக்கிச் சென் றுள்ளனர். நாங்கள் விழித்து விட்டோம் இந்த நூலை ஆக்கு வதற்கு கல்விமான்கள் முழு மையான தங்களுடைய ஆற் றலை வெளிப்படுத்தி இருந்த போதிலும் இந்த நூல் முழு மையான வரலாற்று நூலாக வெளிவர சிறிது காலம் பின் செல்லக்கூடும்.'

''சிங்கள மக்கள் தமிழ் மக் களின் வரலாறுகளை திரித்துக் கூறினார்கள். அவர்கள் திரித் துக் கூறுவதற்கு துணைபோகும் விதத்தில் தமிழ்மக்கள் தங்கள் ஆவணங்களை சேமித்துவைக்க வில்லை. அதற்கான முயற்சி களும் இல்லை. சிங்களவர் மத் தியில் இரண்டாயிரம் ஆண்டு களாக சிங்கள பௌத்தத்தின் திரிபுகளை மாணக்கர் மத்தியில் பரப்புவதற்கு அமைப்புக்கள் இருந்தது எங்களிடம்உண்மை வரலாறுகளை எடுத்துக்கூற அப்படியான முயற்சிகள் கூட இல்லை.

நீண்ட, திட்டமிட்ட சதி நோக்கோடு சிங்களப்பேரின வாத வரலாற்றாளர்கள்நடந்து கொண்டிருக்கிறார்கள். காலம் பிந்திவிட்டோம்; என்றாலும் தமிழ் மக்களுக்கு விடுதலை அவ சியம் என்பது சகலராலும் உணரப்பட்டுள்ளது'' என்றார். (152)

## பாசிக்குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்துள் ளார்.

மேற்படி சடலங்கள் யாவும் பொலிசாரினுடையதாக இருக்கலாமெனவும் அந்த அதிகாரி தகவல் வெளியிட் டுள்ளார்.

மேலும் இப்பகுதியில் படை யினர் தேடுதல் நடாத்தி வரு வதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (க)

## தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்போது தமிழ் நாட்டில் ஒரு லட்சத்து 34 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இருக்கிறார்கள். அவர்களின் விருப்பம் என்ன என்பதை வருவாய்த் துறையினரால் கேட்டு அறியப்படும்.

அகதிகளிடையே போராளி கள் யார்? உண்மை அகதிகள் யார் என்பது கண்டறியப்படும் என்றார்.

## வடக்கிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து நூற்றுக் கும் மேற்பட்ட லொறிகள் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வடபகுதியை நோக்கி வந்து கொண்டிருக் கும் வேளையில் அநுராதபுரத் தைத் தாண்டியதும் இராணு வத்தினர் அனாவசியமற்ற முறையில் பல தடைகளைப் போட்டு லொறிகளை பரிசோ தனை செய்வதனாலேயே உரிய நேரத்துக்கு யாழ் மாவட்டத் துக்கு உணவுப் பொருள்கள் வந்து சேரமுடியாது இருப்ப தாகவும் இந்த தடை முகாம் களை குறைத்து ஒரு முகாமை மட்டும் வைத்தால் பெரும் உதவியாக இருக்கும் என அரசாங்க அதிபர் தெரிவித் துள்ளார். (வி)

## ஆறு சிப்பாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் காணமல் போய்விட்டதாக வவுனியாவி லுள்ள பொதுமக்களில் சிலர் தெரிவித்தாக ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்தார்.

இச்செய்தி பற்றி தமக்குச் சரியான தகவல் கிடைக்க வில்லையென்று கொழும்பில் இராணுவஅதிகாரி ஒருவரிடம் இது தொடர்பாகக் கேட்கப் பட்டபோது தெரிவித்தார்.

## மணலாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து 11வது நாளாக யுத்தம் நித்திகைக்குளம் பகுதியில் இடம்பெற்றுவரு கின்றது இதேவேளை மண லாறு முகாமிலிருந்தும் நேற் றும் நேற்று முன் தினமும் தொடர்ச்சியாக குடிமனைகளை நோக்கி இடைவிடாது கடு மையாக ஷெல்தாக்குதல்களை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

முதலாம் திகதியிலிருந்து இப்பகுதியில் இடம் பெற்று வரும் வான், ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிமனைகள் சேதமடைந்துள்ளன. இருநூறுக்கு மேற்பட்ட வீடு கள் தரைமட்டமாகியுள்ளன,

அலம்பில், நாயாறு, வட்டு வாகல், குமுழமுனை, முல்லைத் தீவு, தண்ணீர் ஊற்று ஆகிய பகுதிகளே அரச படையின ரின் தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றன. (56)

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

நேற்றுக்காலை வவுனியாவி லுள்ள தாண்டிக்குளத்திற்கும் மருக்காரம்பளைக்குமிடையில் இத்தாக்குதல் இடம்பெற்றது

ஏ கே. 47 ரக இலகு இயந் திரத் துப்பாக்கி-1, இதற் குரிய ரவைக்கூடுகள்-5, லிங்கு கள்-370, ரி 56 ரக துப்பாக்கி 4, இதற்குரிய ரவைக்கூடுகள்- 19, ரவைகள் 740, வானொ லித் தொடர்புக் கருவி-2, ஜே.ஆர். ரக கைக்குண்டுகள்- 5 ஆகிய ஆயுதங்கள் இத்தாக் குதலில் புலிகளால் கைப்பற் றப்பட்டன.

இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் லெப். அருட்செல்வம் (க. சிவலோகநாதன் வவு னியா) லெப். வேங்கை (ம. தமிழ்ச்செல்வன் பாவற்குளம்) ஆகியோர் வீரமரணமடைந் தனர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தி.மு.க. உறுப்பினர் வெளியேற்றம்

(சென்னை)

தி. மு. க. உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி சட்டப் பேரவைக் கூட்டத்திலிருந்து சபாநாயகரால் நேற்று வெளி யேற்றப்பட்டார்.

இச்சம்பவத்தை ஆட்சே பித்து தி. மு. க. வின் மற் றொரு உறுப்பினரும் சபையி லிருந்து வெளியேறினர்.

ராஜீவ் காந்தி கொலை சம்ப வம் தொடர்பாக தி. மு. க. உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி தெரிவித்த கருத்துக் களையடுத்து சபையில் கூச்ச லும் குழப்பமும் ஏற்பட்ட தாகவும் தி. மு. க. உறுப்பின ரின் பேச்சுக்களை சபைக் குறிப் பிலிருந்து நீக்கும்படி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து தி. மு. க. உறுப்பினரின் உரையை சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு சட்டப்பேரவைத் தலைவர் உத்தரவிட்டார்.

இதனை ஏற்றுக் கொள்ளாத தி. மு. க. உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார். இதனை யடுத்து சபையிலிருந்து வெளி யேறுமாறு சபைத் தலைவர் உத்தரவிட்டார். வெளியேற மறுத்த தி. மு. க. உறுப்பி னர் திரு. பருதி இளம் வழுதி சபைக் காவலர்களால் பல வந்தமாக வெளியேற்றப்பட் டார். (க)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,